தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

27.02.2013 A.M

## வறட்சி நிவாரணக்குழுவின் வருகைக்காக காத்திருக்கும் விவசாயிகள்

விருதுநகர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்டு, அரசின் நிவாரண உதவி கிடைக்குமா என எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் இப்பகுதி விவசாயிகள்.

இம்மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 2 லட்சம் ஏக்கரில் பயிரிட்டிருந்த பயிர்கள் அனைத்தும் வறட்சியால் கருகியுள்ளன. இப்பகுதியை பார்வையிட வறட்சி நிவாரணக்குழு வருவதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் வறட்சி நிவாரணக்குழு இதுவரை இம்மாவட்டத்துக்கு வரவில்லை.

நெல், கரும்பு, வாழை, பருத்தி உள்ளிட்டவைகளையும், மானாவாரி விவசாயம் மூலம் குதிரைவாலி, கம்பு, சோளம், சூரியகாந்தி, உள்ளிட்ட பயறு வகைகளையும் இப்பகுதி விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். ஆனால், போதிய மழை இல்லாததால் பயிர்கள் அனைத்தும் கருகத் தொடங்கின.

அடிக்கடி ஏற்படும் மின்தடையால் கிணற்றில் கிடைக்கும் நீரையும் மோட்டார் மூலம் எடுப்பதற்கும் முடியாமல் பயிர்கள் கருகின. விருதுநகர், செங்குன்றாபுரம், பாவாலி, சீனியாபுரம், எல்கைபட்டி, மூளிப்பட்டி, ஆமத்தூர், வெள்ளூர், தவசிலிங்காபுரம், எரிச்சநத்தம், நடையனேரி, குமிழங்குளம், எம்.புதுப்பட்டி, செங்கோட்டை, பாலவநத்தம் உள்பட பல்வேறு கிராமங்களில் மக்காச்சோளம் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் செலவு குறைவு. ஆனால் செலவு செய்த பணத்தைக்கூட எடுக்க முடியாத நிலை இருப்பதால் பயிரை அறுவடை செய்யாமல் அப்படியே விட்டுவைத்துள்ளனர் விவசாயிகள்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் விஜயமுருகன் தினமணி செய்தியாளரிடம் கூறியது: விருதுநகர் மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு அமைத்துள்ள வறட்சி நிவாரணக்குழு இப்பகுதிக்கு வந்து பார்வையிட்டதும் நிவாரண உதவி கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம்.

ஆனால், இதுவரையில் இக்குழுவினர் தென்மாவட்டங்களுக்கு வரவில்லை. விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை தாமதிக்

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.78 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 33.78 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 268 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.58 டி.எம்.சி.

## அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

சம்பா சாகுபடி மேற்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கக் கோரி, தமிழக விவசாயிகள் சங்கத்தினர் தஞ்சாவூரில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்த சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.ஆர். சிவசாமி பேசியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா பயிர் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், 12,000 ஏக்கருக்கு மட்டுமே ரூ.15,000 வீதம் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பரப்பளவுக்கு எதுவுமே கிடைக்காது. தஞ்சை மாவட்ட விவசாயிகளை ஏமாற்றியதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதால் விவசாயிகளும் சம்பா சாகுபடியைக் காலம் தாழ்ந்து தொடங்கினர். இதனால், பிப்.15 வரை தண்ணீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், ஜனவரி மாதமே தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால், பயிர்கள் அனைத்தும் காய்ந்துவிட்ட நிலையில், 12,000 ஏக்கருக்கு மட்டுமே இழப்பீடு என்பது தவறானது.

ஆற்றுப் பாசனத்தை நம்பி சாகுபடி செய்த 3 லட்சம் ஏக்கர் முழுவதுமே பாதிக்கப்பட்டுள்ளது. பம்ப்செட் வைத்துள்ள விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் முழுமையாகக் கிடைக்காததால் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு, அலுவலர்கள் தவறான புள்ளிவிவரங்களைக் கூறியுள்ளனர். அதை ஏற்று தமிழக அரசு நிவாரணம் அறிவித்துள்ளது. இதனால், விவசாயிகள் வாழ்க்கையை நடத்துவதற்கு வழியில்லாமல் தவிக்கின்றனர்.

எனவே, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும். இழப்பீடு வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்றார் சிவசாமி.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலர் கே.எம். ராம கவுண்டர், மாவட்டத் தலைவர் ஆர். சுகுமாரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வறட்சியை எதிர்கொள்ள ஆலோசனை

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடை காலத்தில் வறட்சி மற்றும் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் பேசியது:

தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள பேரூராட்சிகள், நகராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. தொடர்ந்து மாவட்டம் முழுவதும் 6,145 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் தடையின்றி குடிநீர் வழங்கப்படும். வறட்சியை எதிர்கொள்வதற்காக அனைத்து நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தமிழக முதல்வருக்குத் தெரிவித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் வைத்திலிங்கம்.

மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி , எம். ரெத்தினசாமி, இரா. துரைக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 33.98 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 33.98 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 518 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணை

யிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## சம்பா பாதிப்புக்கு நிவாரணம் கோரி 2-வது நாளாக சாலை மறியல்

காவிரி டெல்டாவில் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்ட 7 லட்சம் ஏக்கருக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் செவ்வாய்க்கிழமை 2-வது நாளாக சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சம்பா சாகுபடியில் காவிரி டெல்டாவில் 50 சதவீதத்துக்குமேல் 3.61 லட்சம் ஏக்கர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு கணக்கீடு செய்து நிவாரணம் அறிவித்துள்ளது.

நான்கில் ஒரு பங்கு மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளது என அரசு கணக்கீடு செய்திருப்பது ஏற்கதக்கதல்ல. நான்கில் மூன்று பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் தமிழக அரசு டெல்டாவில் பாதிக்கப்பட்ட சுமார் 7 லட்சம் ஏக்கருக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

50 சதவீதத்துக்கும் கீழ் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசின் காப்பீட்டுத் தொகை கிடைக்கும், ஆனால் மாநில அரசின் அறிவிப்பில் இவர்களுக்கு நிவாரணம் இல்லையென்பது உறுதியாக உள்ளது. எனவே தமிழக அரசு இதை பரிசீலித்து இவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

தற்போதுள்ள மகசூல் பாதிப்பு கணக்கீட்டை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், பேரளவுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும். வேலைவாய்ப்பை இழந்துள்ள விவசாயத் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்க வேண்டும். காப்பீடு செய்து கொள்ளாத விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை 44 இடங்களில் நடைபெற்ற தொடர் சாலை மறியலில் 550 பேர் கைதாகினர். தொடர்ந்து 2-வது நாளாக செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், கூத்தாநல்லூர், மன்னார்குடி உள்ளிட்ட 28 இடங்களில் சாலை மறியல் நடைபெற்றது.

இதில் திருவாரூரில் மாதர் சங்க மாவட்டச் செயலர் அம்புஜம் தலைமையில் 15 பேர், கூத்தாநல்லூரில் சிபிஐ கிளைச் செயலர் ஜெயபால் தலைமையில் 7 பேர், பேரளத்தில் சிபிஐ ஒன்றியச் செயலர் தீனகவுதமன் தலைமையில் 14 பேர், மாங்குடியில் மாவட்ட விவசாய நிர்வாகக்குழு உறுப்பினர் நாகராஜன் தலைமையில் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இது தவிர மணலி,பாமணி, கொக்கலாடி, கட்டிமேடு, கொத்தமங்கலம், பிச்சன்கோட்டகம், மேலமருதூர், விளக்குடி உள்ளிட்ட 23 இடங்களில் 600 பேர் சாலை மறியலில் ஈடுபட்டு பின்னர் கலைந்து சென்றனர்.

முன்னதாக, கைது செய்யப்பட்ட 48 பேர் சிறிது நேரத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் போராட்டக்குழுவைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் கே. உலகநாதன், சிபிஎம் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வை. சிவபுண்ணியம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி, மாவட்ட துணைச் செயலர் வை. செல்வராஜ் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் சி. நடராசனை சந்தித்து கோரிக்கை குறித்து விளக்கமளித்தனர்.

விவசாயிகளின் கோரிக்கையை கேட்டறிந்த ஆட்சியர் காப்பீடு செய்ய முடியாத விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மூலம் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும், பிற கோரிக்கைகள் அரசின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்படும் என்று கூறியதைத் தொடர்ந்து விவசாயிகள் தங்களது சாலை மறியல் போராட்டத்தை விலக்கிக் கொண்டனர்.

மன்னார்குடியில்...

மன்னார்குடி கீழப்பாலத்தில் நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட துணைச் செயலர் வை. செல்வராஜ் தலைமை வகித்தார். இதில் சுமார் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள்  கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி மறியலில் ஈடுபட்டனர்.

நீடாமங்கலத்தில்...

நீடாமங்கலம் வட்டம், ஆதனூரில் நடந்த மறியலுக்கு விவசாய சங்கத் தலைவர் கே. ராவணன், நகர செயலர் யு. சந்துரு ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஒளிமதியில் நடந்த மறியலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் நடேச.தமிழார்வன், விவசாயதொழிலாளர் சங்கத் தலைவர் ராதா, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.டி.எம்.எஸ். மீனாட்சிசுந்தரம், எஸ். கலியபெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மறியலால் தஞ்சாவூர் -வேளாங்கண்ணி பேருந்து மார்க்கத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## பயிர் சேத நிவாரணத் தொகை ரூ.18.22 கோடி ஒதுக்கீடு: அமைச்சர்

கடலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை வழங்க ரூ.18.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர் கிராமத்தில் காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை மற்றும் காவிரி டெல்டா சிறப்பு கூடுதல் நிவாரணம் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவில் 226 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை வழங்கி அமைச்சர் பேசியது: காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த 331 விவசாயிகளுக்கும், சிதம்பரம் வட்டத்தில் 31 கிராமங்களைச் சேர்ந்த 7284 விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் 51 கிராமங்களைச் சேர்ந்த 7,615 விவசாயிகளின் 12,152 ஏக்கர் நிலங்களுக்கும் நிவாரணத் தொகையாக ரூ.18.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ஆர்.கிர்லோஷ்குமார் தலைமை வகித்து பேசியது: இதுவரை கடலூர் மாவட்டத்தில் 2924 விவசாயிகளுக்கு ரூ.6.43 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 23-ம் தேதி முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

எஞ்சியுள்ள விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என ஆட்சியர் கிர்லோஷ்குமார் தெரிவித்தார்.

விழாவில், கடலூர் மேற்கு மாவட்ட அதிமுக செயலர் வி.கே.மாரிமுத்து, காட்டுமன்னார்கோவில் சட்டப்பேரவை உறுப்பினர் நாக.முருகுமாறன், புவனகிரி சட்டப்பேரவை உறுப்பினர் செல்வி ராமஜெயம், உதவிஆட்சியர் எல்.சுப்பிரமணியன், குமராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.ஏ.பாண்டியன், இணைப் பதிவாளர் ரேணுகாம்பாள், தனிஅலுவலர் பிருந்தா, ஊராட்சி மன்றத் தலைவர் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மரம் நடுவிழா...

கடலூர் : மரம் வளர்ப்பில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்களிப்பு மிகவும் அவசியம் என சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அமைச்சர் எம்.சி.சம்பத் பேசினார்.

வனத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை இணைந்து முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 65 லட்சம் மரக்கன்றுகளை நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் 2.3 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் வனத்துறை மூலம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது.

கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமை வகித்தார்.

கடலூர் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தும் கடந்த 2009 முதல் 2011 வரையில் ஏரித்தோட்டங்களில் ஏல வருவாயில் ஊராட்சிகளுக்கு பங்கீட்டுத் தொகையாக 41 ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.56.71 லட்சத்தை அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கினார்.

இதில் அமைச்சர் எம்.சி. சம்பத் பேசுகையில், "தமிழக முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 65 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்துக்காக சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை மூலம் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வனத்துறை மூலம் பணிகள் நடந்து வருகின்றன.

கடலூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகள் பொது இடங்களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படும். இந்த மரங்கள் நாளைய தலைமுறைக்கு நிழல் தருவதோடு பசுமையான தமிழகத்தை உருவாக்கித் தரும்.

இந்த பணியில் வனத்துறையோடு இணைந்து மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வமுடன் மரக்கன்றுகளையெல்லாம் மரமாக்கி காட்ட வேண்டும்.

மாவட்ட வனஅலுவலர் தியாகராசன் வரவேற்றார். மாவட்ட ஊராட்சித் தலைவர் மல்லிகா வைத்தியலிங்கம், நகராட்சித் தலைவர் கே.சி.சுப்ரமணியம், துணைத் தலைவர் சி.ஜெ.குமார், ஒன்றியச் செயலர் இராம.பழனிச்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

27.02.2013 A.M

## முந்திரி ஏற்றுமதி75,798 டன்னாக சரிவு



புதுடில்லி:நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான, 10 மாத காலத்தில், நாட்டின் முந்திரி பருப்பு ஏற்றுமதி, 75,798 டன்னாக சரிவடைந்துள்ளது. இதன் மதிப்பு, 3,089 கோடி ரூபாயாகும்.ஆக, அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டின், இதே காலத்தை விட, 17 சதவீதம் குறைந்துள்ளது.கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டின், முந்திரி பருப்பு ஏற்றுமதி, 1,31,760 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு, 4,390 கோடி ரூபாயாகும். உள்நாட்டில் உற்பத்தி குறைவால், நம் நாடு, தான்சானியா, மேற்கு ஆப்ரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து, முந்திரி கொட்டையை இறக்குமதி செய்து கொள்கிறது. நடப்பு நிதியாண்டில், இதுவரை, 14 லட்சம் டன் முந்திரி கொட்டை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இறக்குமதி செய்யப்படும் முந்திரி கொட்டையின் விலை அதிகரித்துள்ளதால், மறு ஏற்றுமதி செய்யப்படும் முந்திரி வாயிலாக கிடைக்கும் வருவாய் குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சென்ற ஜனவரி மாதத்தில், 71,610 டன் முந்திரி கொட்டை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டின், இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, இரண்டு மடங்கு அதிகமாகும்.நம் நாட்டின், முந்திரி ஏற்றுமதிக்கு முக்கியச் சந்தைகளாகத் திகழும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், முந்திரிக்கான தேவை குறைந்துள்ளது. இதுவும், நாட்டின் முந்திரி ஏற்றுமதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## சரக்கு கட்டண உயர்வால்...தானியம், பருப்புகள் விலை உயரும்



புதுடில்லி:வரும் 2013-14ம் நிதியாண்டிற்கான ரயில்வே பட்ஜெட்டில், தானியங்கள், பருப்பு வகைகள்,கடலை எண்ணெய் ஆகியவற்றை கொண்டு செல்வதற்கான சரக்கு கட்டணம், 6 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.இதனால், முக்கிய உணவுப் பொருட்களின் விலை, மேலும் உயரும் என,தெரிகிறது

**கடலை எண்ணெய்:**கட்டணம் உயர்த்தப்பட்டதை அடுத்து, உணவு தானியம் மற்றும் பருப்பு வகைகளை, சராசரியாக, 1,307 கிலோ மீட்டர் தூரம் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து செலவினம், டன் ஒன்றுக்கு, 1,326.80 ரூபாயிலிருந்து, 1,403.60 ஆக அதிகரிக்கும்.இதே போன்று, ஒரு டன் கடலை எண்ணெய் கொண்டு செல்வதற்கான ரயில் சரக்கு கட்டணம், சராசரியாக, 1,650 கிலோ மீட்டருக்கு, 1,746.60 ரூபாயிலிருந்து, 1,848 ஆக உயரும்.மேலும், யூரியா கொண்டு செல்வதற்கான கட்டணம், 5.8 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஒரு டன் யூரியாவை, சராசரியாக, 886 கி.மீ., தூரம் கொண்டு செல்வதற்கான, சரக்கு கட்டணம், 869.60 ரூபாயிலிருந்து, 920 ரூபாயாக உயரும்.

யூரியாவிற்கான சரக்கு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால், இது மத்திய அரசின் உர மானியச் செலவினத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இவை தவிர, டீசல் மற்றும் சமையல் எரிவாயு மீதான சரக்கு கட்டணமும், அதிகரிக்கப்பட்டுள்ளது.இதன்படி, ஒரு டன் டீசலுக்கான சரக்கு கட்டணம், 5.79 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, 984.80 ரூபாயிலிருந்து, 1,041.80 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போன்று, ஒரு டன் மண்ணெண்ணெய் மீதான சரக்கு கட்டணமும், 5.79 சதவீதம் உயர்த்தப்பட்டு, 886.30 ரூபாயிலிருந்து, 937.60 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், ஒரு டன் இயற்கை எரிவாயுவிற்கான, சரக்கு கட்டணம், 5.79 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, 937.60 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.எண்ணெய் நிறுவனங்களின், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை கொண்டு செல்வதில், ரயில் போக்குவரத்தின் பங்களிப்பு, 32-33

சதவீதமாக உள்ளது. கட்டணம் உயர்த்தப்பட்டதை அடுத்து, இவற்றின் விலையும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.கடந்த மாதம், டீசல் விலை உயர்த்தப்பட்டதால்,ரயில்வேக்கு, கூடுதலாக, 3,330 கோடி ரூபாய் எரிபொருள் செலவினம் ஏற்பட்டுள்ளது.

**எரிபொருள் செலவினம்:**இத்துடன், மின்கட்டணமும் உயர்த்தப்படுவதால், வரும் நிதியாண்டில் ரயில்வேயின் எரிபொருள் செலவினம், 5,100 கோடி ரூபாய்க்கும், அதிகமாக இருக்கும் என, அமைச்சர் பவன்குமார் பன்சால் தெரிவித்தார்.ரயில் சரக்கு கட்டணம் மீண்டும் உயர்த்தப்பட மாட்டாது என, எதிர்பார்க்கப்பட்ட நிலை யில், கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது என்பது தொழில்துறையினருக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

## தர்மபுரியில் கொளுத்தும் வெயில் முலாம் பழம் விற்பனை ஜோர்

தர்மபுரி: முலாம் பழ சீசன் துவங்கியதை தொடர்ந்து, தர்மபுரியில் முலாம் பழம் விற்பனை அதிகரித்துள்ளது.

வெயில் காலத்தில் மனிதர்களுக்கு ஏற்படும் சோர்வை போக்கி, உடலுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தை தரும் பழங்களின் வரிசையில் தர்பூசணி, வெள்ளரி வரிசையில் முலாம் பழம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஃபிப்ரவரி மாத மத்தியில் துவங்கும் முலாம் பழ சீசன், மே, மாத இறுதி வரை விற்பனைக்கு வருகிறது. தர்மபுரி மாவட்டத்திற்கு முலாம் பழங்கள் ஆந்திரா மாநிலம் கடப்பா, குப்பம், சித்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

தற்போது, முலாம் பழ சீசன் துவங்கியதை அடுத்து தர்மபுரி பஸ்ஸ்டாண்ட், கடைவீதி மற்றும் நகரில் உள்ள பழக்கடைகள், உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் முலாம் பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் பனிப்பொழிவு உள்ள போதும், பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகிறது. இதனால், பொதுமக்கள் கடைகளில் விற்பனை செய்யப்படும் முலாம் பழங்களை ஆர்வத்துடன் வாங்கி சென்று பழச்சாறு தயாரித்து பருகி வருகின்றனர். ஜூஸ் கடைகளிலும் முலாம் பழம் ஜூஸ் வாங்கி பருகி வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு மானியத்தில் பவர் டில்லவர் வழங்கல்

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலக வளாகத்தில், வேளாண்மைத் துறை சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய குழுக்களுக்கு மானிய விலையில் பவர் டில்லர் வழங்கும் நிகழ்ச்சி

நடந்தது.
கலெக்டர் லில்லி, தோட்டக்கலைத்துறை சார்பாக, எட்டு விவசாய குழுக்களுக்கு, 9 லட்சத்து, 20 ஆயிரம் ரூபாய் மானியத்தில், எட்டு பவர் டில்லர்கள் வழகினார். பவர் டில்லரை பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும், ஒரு குழுவில் இருந்து, தலா, இரண்டு பேர் வீதம், 16 பேருக்கு வேளாண்மை பொறியியல் துறை மற்றும் காட்டன் கிரீவ்ஸ் நிறுவனத்தின் மூலம், இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.
பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு, தலா ஆயிரம் ரூபாய் வீதம், 16 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் விவசாய குழுக்கள், பவர் டில்லர்களை குறைந்த பட்சம், ஐந்தாண்டு பராமரிக்க வேண்டும்.
வேளாண் இணை இயக்குனர் மனோகரன், வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்) வேணுகோபால், வேளாண் துணை இயக்குனர் (உழவர் பயிற்சி) மேகநாதன், வேளாண் துணை இயக்குனர் (மாநில திட்டம்) கனகசபை உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் (மத்திய திட்டம்) கருப்பையா செய்திருந்தார்.

## 540 மூட்டை மஞ்சள் குவிப்பு ரூ.25 லட்சத்துக்கு வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டையில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 540 மூட்டை மஞ்சள், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.
ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. அதில், 18 தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிளில் உள்ள விவசாயிகள் மஞ்சளை அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.
பல்வேறு மசாலா தயாரிக்கும் நிறுவனங்களும், வியாபாரிகளும் மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.
நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 540 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. அதில், விரலி ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 9,059, குறைந்த பட்சம் 5,329 ரூபாய்க்கு ஏலம் போனது. குண்டு ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 5,797, குறைந்த பட்சம், 3,229 ரூபாய்க்கும் ஏலம் போனது.
அதேபோல், பனங்காலி ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 14 ஆயிரத்து, 600, குறைந்தபட்சம், 8,199

ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது.

## வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் மோகனூர் விவசாயிகள் விரக்தி

மோகனூர்: வாய்க்காலில், 50 நாட்களுக்கு மேல் தண்ணீர் சப்ளை இல்லாததால், கடைமடை பகுதியில் சாகுபடி செய்துள்ள பயிர்கள் காய்ந்து, விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.
மோகனூர் வாய்க்கால் நன்செய் இடையாறில் துவங்கி பாலப்பட்டி, மணப்பள்ளி, பேட்டப்பாளையம், மோகனூர், ஒருவந்தூர், வடுகப்பட்டி வரை பாய்ந்து செல்கிறது. இந்த வாய்க்கால் மூலம், 3,000 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.
மோகனூர் வாய்க்காலை பயன்படுத்தி நெல், வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், தென்னை போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ராஜா, குமாரபாளையம் வாய்க்கால் மூலம் மோகனூர் வாய்க்கால் பாசன வசதி பெறுகிறது.
இவ்வாய்க்கால் கடைமடை பகுதி வரை தண்ணீர் செல்லாததால், சாகுபடி செய்துள்ள பயரிகள் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த, 50 நாட்களாக மோகனூர் வாய்க்காலில் தண்ணீர் சப்ளை இல்லாததால், இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
அதனால், விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். ஏற்கனவே, முறைப்பாசனம் என்ற பெயரில், ராஜ, குமாரபாளையம் வாய்க்காலில் தண்ணீர் பெற்று வரும் சூழ்நிலையில், பொதுப்பணித்துறை அதிகாரிகளின் மெத்தன போக்கால், மோகனூர் வாய்க்கால் பாசன பகுதியில், பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.
"பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், மோகனூர் வாய்க்காலில் பாசன வசதி பெறும் வகையில், நாமக்கல் கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நூறுநாள் வேலையில் விவசாய பணிசெய்ய ஆர்வமில்லை : அறிவிப்பு வந்தும் பதிவு செய்ய ஆளில்லை

கரூர்: "ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களை விவசாயத்துக்கு பயன்படுத்தி கொள்ளாலாம்' என, அரசு அறிவித்துள்ளது. ஆனால் நூறு நாள் திட்டத்தில் விவசாய பணி செய்ய, விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.
விதைகள், உரத்தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு, பருவமழை ஏமாற்றம், விவசாயத்துக்கு தேவைப்படும் மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளின் உற்பத்தி குறைவு, விவசாய கூலியாட்கள்

பற்றாக்குறை, இளைய தலைமுறையினரின் மாற்று தொழில் ஆர்வம் போன்ற காரணங்களால் விவசாயம் நலிவடைந்து வருகிறது. விவசாயத்தை காக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மானிய விலையில் விதை மற்றும் உரம், விவசாய கூலி தொழிலாளர் பற்றாக்குறையை நீக்க நவீன தொழில் நுட்பம், சொட்டு நீர் பாசனத்துக்கு, 100 சதவீத மானியம் என அறிமுகம் செய்தாலும், கூலியாட்கள் பற்றாக்குறை பெரும் பிரச்னையாக மாறுகிறது.

மேலும் மத்திய அரசு செயல்படுத்தி வரும், 100 நாள் வேலை உறுதி திட்டத்தால், வேளாண் பணிகள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர். இதனால், விவசாய பணிகளை, ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை கொண்டு மேற்கொள்ளலாம் என, அரசு அறிவித்தது.

இதன்படி, குறு மற்றும் சிறு விவசாய நிலங்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், வறுமைகோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச நிலங்கள், இந்திரா வீட்டு வசதி வீடுகளில் குடியிருப்போர் நிலங்கள், வேளாண்துறை மற்றும் வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகிய பணிகளுக்கு, வேலை உறுதி திட்ட பணியாளர்களை பயன்படுத்தலாம் என, மாவட்ட நிர்வாகத்துக்கு வழிகாட்டுதல் உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில், 157 பஞ்சாயத்துகளில், வேலை உறுதி திட்டத்தில், ஒரு லட்சத்து, 65 ஆயிரத்து, 192 பேர் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ளனர். இதில், 45 ஆயிரத்து, 402 பேர் மட்டுமே பணிக்கு தினமும் வருகின்றனர். இவர்கள் மூலம் விவசாய பணிகளை மேற்கொள்ள, வேளாண்துறை சார்பில் சர்வே எடுக்கும் பணி நடக்கிறது. விவசாயிகள் மத்தியில், இதற்கு பதிவு செய்ய ஆர்வமில்லாமல் உள்ளனர்.

இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிஒருவர் கூறியதாவது:

விதை விதைத்தல் முதல், அறுவடை வரை பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். அவர்களுக்கு, ஐந்து மணி நேரத்துக்கு, 250 ரூபாய் கூலி வழங்கப்படுகிறது. தற்போது ஆள் பற்றாக்குறையால், இந்த வேலைக்கு இயந்திரங்களை பயன்படுத்தும் நிலை மாறி விட்டது.

இந்நிலையில் நிலங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுதல், கால்வாய்களை தூர் எடுத்தல், வயல்களில் வரப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை செய்ய மட்டுமே, 100 நாள் திட்டம் பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளலாம் என, அறிவிக்கப்பட்டுள்ளது. வறட்சி காலம்

என்பதால், கால்வாய்களை தூர் வாருதல், வரப்பு மேம்படுத்தல் போன்ற பணிகளுக்கு ஆட்கள் தேவையில்லை. இதன் காரணமாக விவசாயிகள் இத்திட்டத்தில், இதுவரை யாரும் பதிவு செய்யவில்லை. பதிவு செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் விவசாயிகளிடம் இல்லை. வேலை உறுதி திட்டத்தில், எட்டு மணி நேரம் வேலை செய்தால், 137 ரூபாய் கூலி கிடைக்கிறது. விவசாய தொழிலாளர்களுக்கு கூலி குறைவு என்பதால், 100 நாள் திட்டத்தில், விவசாய பணிக்கு வரும் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### நவீன கரும்பு சாகுபடி பயிற்சி

தேவதானப்பட்டி:வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில், கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு மூன்று நாள் நவீன கரும்பு சாகுபடி பயிற்சி முகாம், மேலாளர்கள் சிவாஜிகணேசன், ஜெயராம் தலைமையில் நடந்தது. இணை மேலாளர் வெற்றிவேல் வரவேற்றார். உசிலம்பட்டி, சாப்டூர், தேனி, மயிலாடும்பாறை ஆகிய கரும்பு கோட்டங்களில் இருந்து, விவசாயிள் கலந்து கொண்டனர். வயல்வெளி பயிற்சிக்காக மேல்மங்கலம் முன்னோடி விவசாயி பிச்சையின் கரும்பு வயலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். உதவி பொது மேலாளர்கள் முருகன், தங்கராஜ் உட்பட பலர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். ஆண்டிபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் கரும்பு சாகுபடியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

### வறட்சியால் பயிர்க்கடன் வழங்க முடியாமல் தவிப்பு

தேனி:தேனி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால், பயிர்க்கடன் இலக்கை எட்ட முடியாமல், கூட்டுறவுத்துறை தவித்து வருகின்றது.தேனி மாவட்டத்தில் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டது. நடப்பு ஆண்டு ஜனவரி, பிப்ரவரியில் பெய்ய வேண்டிய கோடை மழையும் பெய்யவில்லை. இதனால்,நெல் விவசாயம் உட்பட அனைத்து விவசாயங்களும் பொய்த்துப்போனது. இதனால், விவசாயிகள் பயிர்க்கடன் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் தங்களுக்கு உரிய இலக்கை எட்ட முடியவில்லை. மொத்த இலக்கில், 70 சதவீதத்திற்கும் குறைவாகவே கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் பெற்ற விவசாயிகள், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கடனை திரும்ப செலுத்துவதற்காக,வட்டி தள்ளுபடி திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், விவசாயிகள் பயிர்க்கடன் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. அதேபோல், விவசாய நகைக்கடன் பெறுவதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.

### அவரை சாகுபடி விவசாயிகள் ஒரு வாரத்திற்கு பிறகு விலை உயர்வு

தேனி:தேனி மாவட்டத்தில் அவரைக்காய் விலை, ஒரு வாரத்திற்கு பிறகு மீண்டும் உயர்ந்துள்ளதால்,சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர். ஆண்டிபட்டி, பெரியகுளம், போடி, தேனி, சின்னமனூர், தேவாரம், உத்தமபாளையம், கம்பம், கூடலூர், என எல்லா இடங்களிலும் பரவலாக அவரைக்காய் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த வாரம் இதன் விலை சரிந்தது. மொத்த மார்க்கெட்டில், ஒரு கிலோ அவரைக்காய் 5 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதனால் விவசாயிகள் எடுப்பு கூலி கூட கிடைக்காமல் தவித்தனர். இந்நிலையில், மொத்த மார்க்கெட்டில் சில்பா அவரை கிலோ 12 ரூபாய், பட்டை அவரை கிலோ 15 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. தேனி உழவர்சந்தையில் நேற்று சில்பா அவரை கிலோ 15 ரூபாய், பட்டை அவரை கிலோ 18 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.ஒரு வார இடைவெளிக்கு பிறகு மீண்டும் அவரை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகளுக்கு நிம்மதி ஏற்பட்டுள்ளது.
வெண்டைக்காய் சாகுபடி பரப்பு குறைந்து, மார்க்கெட்டிற்கு வரத்து மிகவும் குறைந்துள் ளது. இதனால் தேவை அதிகரித்து, விலை உயர்ந்துள்ளது. 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்ற ஒரு கிலோ வெண்டைக்காய் நேற்று கிலோ 35 ரூபாய்க்கு விற்கப்பட்டது

## திருவாரூர் விவசாயிகளுக்கு ரூ. 140.42 கோடி நிவாரணம்

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால், 50 சதவீதத்துக்கு மேல் பாதித்த, ஒரு லட்சத்து, 36 ஆயிரத்து, 718 விவசாயிகளுக்கு, 140.42 கோடி ரூபாய் நிவாரணம் ஒதுக்கப்பட்டுள்ளது.திருவாரூர் கலெக்டர் நடராஜன் அறிக்கை:திருவாரூர் மாவட்டத்தில், வறட்சியால், 50 சதவீத்துக்கு மேல் பாதித்த, 93.611 ஏக்கர் பரப்புக்கு பேரிடர் நிவாரண நிதியில் ஏக்கருக்கு, 5,000, ரூபாய் பயிர்காப்பீடு, நிவாரணத்தொகை முன் பணமாக, 10 ஆயிரம் ரூபாய் என, ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் முதல்வர் உத்தரவுப்படி வழங்கப்பட உள்ளது.
திருவாரூர் தாலுகாவில், 7.669 ஏக்கருக்கு, 11.5 கோடி ரூபாயும், நன்னிலம், 8.675 ஏக்கருக்கு, 13.01 கோடி, குடவாசல், 12.689 ஏக்கருக்கு, 19.03 கோடி, வலங்கைமான், 6,965 ஏக்கருக்கு, 10.45 கோடி, மன்னார்குடி, 18.864 ஏக்கருக்கு, 8.11 கோடி, திருத்துறைப்பூண்டி தாலுகாவில், 33.345 ஏக்கருக்கு 50.01 கோடி ரூபாய் என, மாவட்டத்தில், ஏழு தாலுகாவிலும், ஒரு லட்சத்து, 36 ஆயிரத்து, 718 விவசாயிகள் பயன்பெறும் வகையில், 140.42 கோடி ரூபாய் நிவாரணம் ஒதுக்கப்பட்டு, தஞ்சை மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு காசோலை மூலம் அனுப்பப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படும்.

# விவசாய மலர்

## பசு - பால் காய்ச்சல் நோய்



பால் காய்ச்சல் நோய் என்பது கறவை மாடுகளின் ரத்தத்தில் கால்சியம் என்ற சுண்ணாம்பு சத்து குறைபாட்டின் காரண மாக ஏற்படக்கூடிய மெட்ட பாலிக் நோயாகும். பசுவின் ரத்தத்தில் 8-12% மில்லிகிராம் என்ற அளவில் கால்சியம் இருக்க வேண்டும். பல்வேறு காரணங்களினால் ரத்தத்தில்இருந்து கால்சியம் 8% மி.கி. இருந்து 2% மி.கி. குறையும்போது குறைவிற்கு ஏற்ப நோயின் அறிகுறிகள் வெளிப்படும். உரிய காலத்தில் சரியான முறையில் சிகிச்சை செய்யாவிட்டால் கறவை பசு இறந்துவிடக்கூடும். ஆகவே இந் நோயினை பற்றிய விபரங்களை கால்நடை உரிமையாளர்கள் அறிந்துகொள்வது நல்லது.

**காரணங்கள்:**

கர்ப்பப்பையினுள் வளரும் கன்றின் வளர்ச்சிக்கு கால்சியம் சத்து அதிகமாக தேவைப்படுவதால்; கன்று ஈன்ற உடன் சீம்பால், பால், சிறுநீர் மூலம் அதிக அளவு கால்சியம் சத்து வெளியேறுதல் காரணமாக; கறவை பசுவிற்கு தேவையான அளவுள்ள தீவனம் வழங்காமையின் காரணமாக. பாரத்தைராய்டு என்ற நாளமில்லா சுரப்பியின் குறைபாடுகள் காரணமாக; உணவில் உள்ள கால்சியம் சத்து ஜீரண மண்டலத்திலிருந்து ரத்தத்தில் கலப்பதில் ஏற்படக்கூடிய குறை பாட்டின் காரணமாக; உடல் எலும்பில்இருந்து போதுமான அளவு கால்சியம் சத்து கிடைக்கப்பெறாத காரணத்தால்.

**நோயின் அறிகுறிகள்:**

பால் காய்ச்சல் நோய் ஏற்படும்பொழுது ரத்தத்திலுள்ள கால்சியம் அளவு 8% மி.கி. இருந்து 2% மி.கி. வரை குறையக்கூடும். பெயர்தான் பால் காய்ச்சலே தவிர உடல் உஷ்ணநிலை குறைந்தே

காணப்படும். ரத்தத்தில் உள்ள கால்சியம் சத்து குறைபாட்டிற்கு ஏற்ப மூன்று நிலைகளில் அதன் அறிகுறிகள் காணப்படும்.

**முதல் நிலை:**

ரத்தத்தில் உள்ள கால்சியம் சத்து 8% மி.கி. இருந்து 5% மி.கி. குறையும்போது முதல்நிலை அறிகுறிகள் காணப்படும். கறவைப்பசு பதட்டமாகவும் பரபரப்பாகவும் காணப்படும். நிற்க முடியாமல் தள்ளாடும். நடுங்கும். தீவனம் தின்னாது. நாக்கை வெளியே நீட்டியும் பற்களை நரநரவென கடிக்கும். உடல் உஷ்ண நிலை சரியாக இருந்தாலும் பரக்கபரக்க கண்களை விழிக்கும்.

**இரண்டாம் நிலை:**

ரத்தத்தில் உள்ள கால்சியத்தின் அளவு 5% மி.கி. இருந்து 4% மி.கி. வரை குறையும்போது இரண்டாம் நிலை அறிகுறிகள் காணப் படும். கறவை பசு நிற்க முடியாமல் நெஞ்சை கீழே வைத்து உட்கார்ந்த நிலையில் இருக்கும். தலையை நிலையாக நிறுத்தாமல் ஆட்டிக்கொண்டிருக்கும். பின்னர் கழுத்தை ஒரு பக்கமாக மடித்து வைத்துக்கொள்ளும். உடம்பு குளிர்ந்தும் உமிழ்நீர் வடிந்தும், மூக்கு உலர்ந்தும் காணப்படும். கண்கள் நீலநிறமாக காணப்படும். சாணம் மற்றும் சிறுநீர் வெளியேற்றப்படாமலும் வாலை ஆட்டாமலும் இருக்கும்.

**மூன்றாம் நிலை:**

ரத்தத்தில் உள்ள கால்சியம் சத்து 3% மி.கி. இருந்து 2% மி.கி. ஆக குறையும்போது மூன்றாம் நிலை அறிகுறிகள் தென்படும். பாதிக் கப்பட்ட கறவைப்பசு பக்கவாட்டில் படுத்து கால்களை நீட்டி தலையை தரையில் சாய்த்து மயக்கநிலையில் இருக்கும். கண்களை மூடிய நிலையில் உயிர் பிரிந்ததுபோல் காணப்படும். நாடித்துடிப்பும் இதயத் துடிப்பும் மிகமிக குறைந்தும் உடல் உஷ்ணநிலையும் குறைந்து காணப்படும். வயிறு உப்புசமாக இருக்கும். இந்நிலைக்கு மேலும் சிகிச்சை செய்ய தாமதமானால் மரணம் ஏற்படக்கூடும்.

**சிகிச்சை முறைகள்:**

முதல்நிலை அறிகுறிகள் தெரிந்த உடனே பாதிக்கப் பட்ட கறவை பசுவை மருத்துவ பரிசோதனைக்கும் சிகிச்சைக்கும் உட்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட கறவை பசுவிலிருந்து ரத்தம் மாதிரி எடுத்து கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், கிரியாட்டினின், குளுக்கோஸ், கீட்டோன் போன்றவைகளின் அளவுகளை தெரிந்து கொள்ள ரத்த பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். பாதிக்கப்பட்ட கறவை பசுவில் காணப்படும் நோயின் அறிகுறிகளை வைத்து இதே போல அறிகுறிகளை காட்டும் பிற நோய்களில் இருந்து பிரித்தறிந்து இது பால் காய்ச்சல் நோய்தான் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆரோக்கியமான கறவைப்பசுவின் 100 கிலோ உடல் எடையில் 8 லிட்டர் ரத்தமும் 100 மில்லி ரத்தத்தில் சரா சரியாக 10மி.கி. கால்சியம் இருக்கும். இதன் அடிப்படையில் பாதிக்கப் பட்டுள்ள கறவை பசு வெளிப்படுத்தும் அறிகுறிகளை வைத்து (முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம்நிலை) எந்த நிலை என்பதை கண்டறிந்து அதற்கு தகுந்தாற்போல் தேவைப்படும் கால்சியத்தின் அளவினை கணக்கீடு செய்து கால்சியம் மருந்தினை ரத்த நாளத்தின் மூலம் உடலில் செலுத்தவேண்டும்.
பின்னர் ரத்தப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ரத்த மாதிரியின் முடிவு பிரகாரம் தேவைப்படும் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும். இம்மாதிரியான சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் பாதிக்கப்பட்ட கறவை பசு பால் காய்ச்சல் நோயிலிருந்து காப்பாற்றப் படுவதுடன் பால் கொடுக்கும் திறனும் குறையாமல் இருக்கும். ஒரு போதும் நாட்டு வைத்தியர், கருவூட்டாளர்கள், கால்நடை மருத்துமனையில் பணியாற்றும் ஊழியர்கள் போன்ற போலி வைத்தியர்களை அழைத்து சிகிச்சை செய்யக்கூடாது. இவர்களது தவறான சிகிச்சையின் காரணமாக கறவைப்பசு இறந்துவிடக்கூடும்.

**தடுப்புமுறை:**
கறவை பசு 7 மாத சினைக்காலம் முடிந்த உடன் பால் கறப்பதை நிறுத்த வேண்டும். எட்டாவது மாத சினைப்பருவத்தில் கறவை பசுவை டாக்டரது பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். டாக்டரது சிபாரிசு பிரகாரம் தீவனம், வைட்டமின், தாது உப்புக்கள் போன்றவைகளை வழங்க வேண்டும். தேவைப்பபட்டால் ரத்தத்தில் உள்ள கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், கிரியாட்டினின் குளூக்கோஸ், கீட்டோன் போன்ற பரிசோதனைகளை மேற்கொண்டு பரிசோதனை முடிவிற்கேற்ப டாக்டரது சிபாரிசு பிரகாரம் பராமரிப்பினை மேற்கொண்டால் பால்காய்ச்சல் நோய் வராமல் முழுமையாக தடுக்க முடியும்.
**-டாக்டர் கே.கே.மூர்த்தி, 95859 50088.**

## சின்னச்சின்ன செய்திகள்




**சம்பங்கி மலர் சாகுபடி:**
பெங்களூரு அசர்கட்டா தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தின் ரகங்கள் ஸ்ரீகாசி, சுகாஷினி, பிராஜ்வால், வைபோவ். பட்டம்- மே, ஜூன், ஜூலை மாதங் கள். ஒரு ஏக்கருக்கு 300

கிலோ விதை தேவைப் படும். எல்லா வகை மண் ணிலும் பொதுவாக வடிகால் வசதி உள்ள மண் ணில் வளரக் கூடியது. தொழு உரம்ஏக்கருக்கு20 டிப்பர் இட்டால் போதும். மேல் உரமாக 20,20:0:13 அல்லது இயற்கை வழி உரமானதழை, மணி சத்துக்கள் கொண்ட உர வகைகளை இடவேண்டும். நிலத் தின் தன்மைக்கு ஏற்பவும், நல்ல வடிகால் வசதி உள்ள வாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக சம்பங்கி ஒரு கிழங்கு வகை பயிராக இருப்பதால் மழைக் காலங்களில் கிழங்கு அழுகல் வரும். இதற்குசூடோமோனாஸ், டிரைகோ டெர்மா விரிடி ஆகிய உயிர் உரங்களை இட்டு பாதுகாக்க வேண்டும். நட்ட 3 மாதங்களில் ஒரு சில இடங் களில் அங்கொன்றும் இங் கொன்றும் வரும். 9 மாதத் தில் மகசூல் குறையும். ஏக்கருக்கு சுமார் 5 முதல் 6 டன் பூ மகசூல் வரும்.

**வீரிய சம்பங்கி:**

விதை கிழங்கு பெரியது. பூக்கள் பெரியது. பூ எடை அதி கம். பூ மொட்டு பெரியது. கிளைக்கும் தன்மை அதிகம். நீண்டநாள் சாகுபடி. மகசூல் அதிகம்.

நாட்டு சம்பங்கி: விதை கிழங்கு சிறியது. பூக்கள் சிறியது. எடை குறைவு. பூ மொட்டு சிறியது. கிளைக்கும் தன்மை குறைவு. குறைவு நாட்கள். மகசூல் சுமார். பூக்களின் எண்ணிக்கை குறைவு. நோய் எதிர்ப்பு சக்தி குறைவு. மேலும் விபரங்களுக்கு: எஸ்.பரசுராமன், த/பெ.மதுரை, களியபேட்டை கிராமம், ஓரக்காட்டுபேட்டை போஸ்ட், உத்திரமேரூர் தாலுகா, காஞ்சிபுரம். 97874 77958.

*பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு: மீன்வளர்ப்பு மேம்பட தமிழக அரசும் மைய அரசும் செயல்படுத்தும் திட்டங்கள்:*

திட்டங்கள் - மானியம்

மீன் குஞ்சு நிலையங்கள் அமைக்க - ரூ.60,000 வரை

கூண்டுகள் அமைத்து மீன் வளர்க்க - ரூ.5,000 வரை

மீன்குஞ்சுகள் மற்றும் தீவனத்திற்காக - ரூ.6,000 வரை

**மாநில அரசு திட்டம்:**

* புதிய குளம், குட்டைகளை அமைக்க ரூ.60,000 வரை. * குளங்கள், தொட்டிகளை சீரமைக்க ரூ.15,000 வரை. * கெண்டை மீன் வளர்க்க உள்ளீட்டு செலவு(குஞ்சுகளுக்கும் உணவிற்கும்) ரூ.10,000 வரை. * நன்னீர் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்க ரூ.1,20,000. * மீன் தீவன நிலையம் அமைக்க - ரூ.1,50,000 * அலங்கார மீன் வளர்ப்புக்கு ரூ.1,50,000.

இத்திட்டங்களுக்கான மானியம் 20 சதவீதம் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்னும் 5 சதவீதம் அதிகம்(25 சதம்) உவர் நீர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும்

உதவிகள் (மத்திய, மாநில அரசுகளின் திட்டம்): இறால் பண்ணை நிறுவவும் புதுப்பிக்கவும் ரூ.60,000.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்:**

நுண்மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்க ரூ.5,00,000.

**தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்:**

நோய் தடுப்பு வசதிகளுடன் இறால் வளர்க்க ரூ.3,75,000. நீர்நிலைகளை புதுப்பித்து மீன் வளர்க்க ரூ.15,000. புதிய குளங்களை அமைத்து மீன் வளர்க்க ரூ.60,000. நுண்மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்க ரூ.2,40,000.

**தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் (சம்பந்தப்பட்ட உபவடி நிலப்பகுதிகளுக்கு மட்டும்):**
பண்ணைக் குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க ரூ.50,000. (தகவல்: டாக்டர் வி.சுந்தரராஜன், அக்வா கல்சர் பவுண்டேஷன், சென்னை-600 073. போன்: 90030 13634).
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## பாரம்பரியமிக்க நாட்டுக்கோழி வளர்ப்பு



பாரம்பரிய நாட்டுக் கோழியை மகளிர் குழுக்கள், வளரும் குழந்தைகள், வயோதி கர்கள்,பென்ஷன்தாரர்கள், வீட்டில் உள்ள பெண்கள், மனஅழுத்தம் உள்ளவர்கள், கடுமையான வேலைப்பளு உள்ளவர்கள், விவசாயிகள், தோப்புகள், தோட்டம், மேய்ச்சல் நிலம் உள்ளவர்கள், காலி இடம் உள்ளவர்கள் என யாவரும் வளர்க்கலாம்.

**நாட்டுக்கோழி வாங்கும் பொழுது கவனிக்க வேண்டியவை:** கழிச்சல் இல்லாமல், எச்சம் இடும் பகுதி வெள்ளையாக மிச்சம் ஒட்டி இருக்கக்கூடாது. ரோமம் கட்டி ஒட்டி இருக்கக்கூடாது. கோழியின் கால்கள் இளம் மஞ்சள் நிறத்துடன் கொண்டை சிவந்த நிறத்துடன், மூக்கு இளம் மஞ்சள் நிறத்துடன், பிடிக்கும்பொழுது திமிறிக் கொண்டு பலத்த சப்தம் இடவேண்டும். தொடைப்பகுதி நல்ல இறுக்கத்துடன் இருக்க வேண்டும். கொண்டை கருமை நிறத்துடன் இருக்கக்கூடாது. நல்ல சுறுசுறுப்புடன் ஓடியாடி மண்ணில் புரண்டு விளையாட வேண்டும். இப்படிப்பட்ட குணநலன்கள் கொண்ட நாட்டுக் கோழியாக பார்த்து வாங்க வேண்டும். முட்டை இடுகின்ற கோழிகள், அடைபடுத்த கோழிகள், முட்டை இட்டு கழிக்கின்ற கோழிகளை வாங்கக்கூடாது. வளர்ப்பதற்கு 3, 4 மாத வயது கோழிகளை வாங்க வேண்டும். உங்கள் இடத்தில் பழகி பெட்டையும் சேவலும் இனச்சேர்க்கை சேர்த்து முட்டையிட்டு அடைவைத்து குஞ்சு பொரிக்க வேண்டும்.

6 பெட்டைக்கு ஒரு சேவல் என்ற கணக்கில் திறந்த வெளியில் வெயிலில் மேய விட்டு வளர்க்கலாம். விற்பனைக்கு சந்தைகள், கறிக் கடைகள், திருவிழா காலங்கள், பண்டிகைகள் என ஏராளமான வழிவகைகள் விற்பனை வாய்ப்புள்ளது. சிறிய முதலீட்டில் பாரம்பரிய நாட்டுக் கோழியை வளர்க்கலாம்.

6 பெட்டை கோழிகள் 7, 8 மாத வயதில் முட்டை இட ஆரம்பிக்கும். ஒரு கோழி 10லிருந்து 13 முட்டைகள் வரை இடும். வருடத்தில் 6 முறை மட்டும் முட்டை இடுவதாக வைத்துக்கொண்டாலும் வருடத்தில் தோராயமாக 60-75 முட்டைகள் கிடைக்கும். ஒரு கோழிக்கு 9 முட்டை அடை வைத்து ஏழு குஞ்சுகள் பொறித்தாலும் இன்றைய நிலவரப்படி ஒரு கோழிக்குஞ்சின் விலை ரூ.40/- (ஒரு நாள் வயது கோழிக்குஞ்சு). (தகவல்: கே.வி.நடராஜன், 98949 15222)

**-கே.சத்தியபிரபா, உடுமலைப்பேட்டை.**

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

27.02.2013 A.M

---

## நடப்பாண்டு வேளாண் பணிக்கு ரூ25.48 கோடியில் 324 நவீன இயந்திரங்கள்

திருச்சி, : நடப்பாண்டு வேளாண் பணிக்காக 324 நவீன இயந்திரங்கள் ரூ.25.48 கோடியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என அமைச்சர் சிவபதி தெரிவித்தார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்தார். நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை வழங்கி அமைச்சர் சிவபதி பேசியது:

காவிரி நதி நீர் பிரச்னையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தற்போது நீதி கிடைத்துள்ளது. மத்திய அரசு வஞ்சகம், சூழ்ச்சி மற்றும் வானம் பொய்த்த நிலையில் நிதியமைச்சர் தலைமையில் ஆய்வுக் குழுவை முதல்வர் அமைத்தார். ஆய்வுக்குழு அறிக்கையின்படி ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்பட உள்ளது. இதன்படி திருச்சி மாவட்டத்தில் 21,794 ஏக்கர் பரப்பில் சம்பா சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட 24,542 விவசாயிகளுக்கு ரூ.33.70 கோடி நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண் பொறியியல் துறை சார்பில் நடப்பு நிதியாண்டில் 324 நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.25.48 கோடியில் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புற இளைஞர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் கொண்ட 16 நபர்கள் கொண்ட குழுவிற்கு ரூ.15 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் குறைந்த வாடகை கட்டணத்தில் அரசு இயந்திரங்களை பயன்படுத்தி 2,557 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தற்போது 54 பயனாளிகளுக்கு ரூ.1.52 கோடி மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் திருச்சி எம்.பி குமார், எம்.எல்.ஏக்கள் பரஞ்சோதி, மனோகர், மாவட்ட ஊராட்சி தலைவர் ராஜாத்தி உட்பட பலர் பங்கேற்றனர். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் தியாகராஜன் வரவேற்றார். உதவி செயற்பொறியாளர் ஜெயதேவன் நன்றி கூறினார்.

## கால்நடை பல்கலைக்கழகம் சார்பில் ஆண்டிபாளையம் கிராமம் தத்தெடுப்பு நோயில்லாத கிராமமாக மாற்ற முடிவு

திருப்பூர்,: திருப்பூர் அருகே உள்ள பி.ஆண்டிபாளையம் கிராமத்தை திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் தத்தெடுத்துள்ளது. இந்த கிராமத்தை கால்நடை நோய் இல்லாத கிராமமாக

மாற்ற முடிவு செய்து உள்ளது.

இதுகுறித்து திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் செல்வராஜ் கூறியிருப்பதாவது:

திருப்பூரில் உள்ள தமிழ்நாடு மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பெருந்தொழுவு ஊராட்சியில் உள்ள பி.ஆண்டிபாளையம் என்ற கிராமத்தை தத்து எடுத்துள்ளது. அந்த கிராமத்தில் ஆடு மாடு போன்ற கால்நடைகளை வளர்க்கும் 75 குடும்பங்கள் உள்ளன. இந்த குடும்பத்தினருக்கு விஞ்ஞான முறையில் கால்நடைகள் வளர்ப்பது எப்படி? என்று சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அந்த கிராமத்தில் உழவர் மன்றம் அமைக்கப்பட்டு நபார்டு வங்கி மூலம் உழவர் மன்றத்திற்கு இலவசமாக வருடம் ரூ.10 ஆயிரம் வீதம் 3 வருடங்களுக்கு ரூ.30 ஆயிரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. வங்கியில் கணக்கு தொடங்கி உழவர் மன்ற நிர்வாகிகள் இந்த பணத்தை எடுத்து கொள்ளலாம்.

இந்த பணத்தை கொண்டு உழவர் மன்றத்தின் மூலம் ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுப்பது எப்படி? என்று கால்நடை மருத்துவர்களை அழைத்து வந்து சிறப்பு பயிற்சி முகாம்கள் நடத்தி கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும் இந்த கிராமத்தில் உள்ள மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், கோழிகளுக்கு ராணி கட் நோய் தடுப்பூசியும், நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசியும், ஆடுகளுக்கு வாய்சப்பை நோய் தடுப்பூசியும் போடப்பட்டு உள்ளது. பசுந்தீவன உற்பத்தி, கோ-4 புல் உற்பத்தி, மாட்டு தீவனமான குதிரை மசால் போன்றவற்றை உற்பத்தி செய்து கொள்ள இலவச பயிற்சியும் அளிக்கப்பட்டு உள்ளது. மொத்தத்தில் இந்த கிராமத்தை கால்நடை நோயில்லாத துப்புரவு கிராமமாக மாற்றி காட்ட உள்ளோம். இவ்வாறு செல்வராஜ் கூறியுள்ளார்.

### விவசாயிகளுக்கு இடுபொருள்

ஆத்தூர், : கெங்கவல்லி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு அட்மா குழுசார்பில் இடுபொருட்கள் வழங்கும் விழா ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குனர் பாரதிநாதன் தலைமை தாங்கினார். அட்மா குழு தலைவரும், மாவட்ட ஊராட்சி உறுப்பினருமான ராஜா, 26 விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர் சித்ரா, துணை அலுவலர் விஜயக்குமார் ஆகியோர் மக்காசோள சாகுபடி குறித்த புதிய தொழில்நுட்ப முறைகளை விளக்கினர். அட்மா தொழில் நுட்ப மேலாளர் சக்கரவர்த்தி நன்றி கூறினார். நிகழ்ச்சியில் அட்மா திட்ட அலுவலர்கள் சங்கர், துரை

அரசு மற்றும் ஏராள மான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சம்பா பாதித்த பகுதிகளை மீண்டும் ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தஞ்சை, : தமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட செயலாளர் சாமி.நடராஜன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி உட்பட 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கோரிக்கைளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் மாவட்ட கலெக்டரிடம் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது,

தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிர் பாதிப்பு குறித்து மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ள கணக்கீடு குறைவாக உள்ளது. 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட நிலங்கள் 12 ஆயிரம் ஏக்கர் மட்டும்தான் உள்ளது. ஒரத்தநாடு, பாபநாசம், திருவிடைமருதூர் ஆகிய ஒன்றியங்களில் ஒரு ஏக்கர் கூட பாதிப்பில்லை என உள்ளது. எனவே மீண்டும் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். தற்போது நிவாரணம் வழங்க கணக்கீடு செய்ததில் ஒரத்தநாடு வட்டம் திருவோணம் ஒன்றியத்தில் அனந்தகோபாலபுரம் கூட்டுறவு வேளாண்மை வங்கிக்கு உட்பட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்காமல் பாதிப்பில்லாத விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பட்டியல் உள்ளது. இது குறித்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு அறிவித்த நிவாரணம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது –

## பண்ணை பள்ளியில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

அரியலூர், : அரியலூர் அருகே பண்ணை பள்ளி யில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பங்கேற்க வேளாண் உதவி இயக்குனர் மல்லிகா அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அரியலூர் வட்டார வேளாண்மைத்துறை மற்றும் சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் தெற்கு குடிசல் கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி கடந்த 19ம் தேதி தொடங்கப்பட்டது. பள்ளி தொடக்க விழாவில் அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மல்லிகா தலைமை வகித்து வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கமாக பேசினார். சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து பண்ணை பள்ளியின் முக்கியத்துவம் மற்றும் கடலை சாகுபடியில் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். இதில் கிரீடு வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப மேலாளர் வளர்மதி, தொழில்நுட்ப வல்லுநர்கள் பழனிசாமி

மற்றும் வாசுகி ஆகியோர் கலந்துகொண்டனர். பள்ளியில் நிலக்கடலை பயிரில் முக்கிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புகள் மூலமாகவும், செயல்விளக்கமாகவும் செய்து காட்டி விவசாயிகளை செய்ய வைப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் உடனுக்குடன் தீர்க்கப்படுகிறது. எனவே தெற்கு குடிசல் கிராமத்தில் உள்ள மற்ற விவசாயிகள் வரும் வாரங்களில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ28 கோடி நிவாரணம் -

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 12,836 பேருக்கு நிவாரண தொகை வழங்கப்படுகிறது. அரியலூர் மாவட்டம் திருமானூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரணத் தொகையினை மாவட்ட கலெக்டர் செந்தில்குமார் விவசாயிகளுக்கு வழங்கி பேசியதாவது: அரியலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான டெல்டா மாவட்டத்திற்கான இழப்பீடு, உதவிகள் வழங்க தமிழக முதல்வர் உத்தரவு வழங்கி அரசாணை வெளியிட்டுள்ளார். இனி எக்காலத்திலும் டெல்டா மாவட்டங்களுக்கான அனைத்து சலுகைகளும் அரியலூர் மாவட்டமும் பெறும்.

வறட்சி பகுதியை பார்வையிட வந்த அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் கொண்ட குழு திருமானூரில் உதயநத்தம் உள்ளிட்ட பாதித்த பகுதி களை பார்வையிட்டனர். அவர்களின் கருத்துகள் ஏற்கப்பட்டு இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் ஏற்பட்ட பயிர் பாதிப்பு மற்றும் வறட்சி குறித்து காவிரி சிறப்பு கூடுதல் நிவாரணம், வறட்சி நிவாரணம் அரசாணைகளின் மூலம் அரியலூர் மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.28,60,95,810 தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 41 கிராமங்கள் பாதிக்கப்பட்டு 12,836 பேருக்கு 19,054 ஏக்கர் நிலங்களுக்கு ரூ.28,60,95,810 நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. எனவே பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் வழங்க முதல்வர் அறிவிக்கப்பட்டு வங்கியில் கணக்குள்ளவர்களுக்கு இத்தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், வங்கியில் கணக்கு தொடங்கி அதன் கணக்கு புத்தகத்தை அலுவலர்களிடம் வழங்கினால் அவர்களுக்கு நிவாரணத் தொகை அவர்களது கணக்கில் ஏற்றப்படும். அதுபோல தேசிய வங்கி மற்றும் தனியார் வங்கிகளிலும் கணக்கு வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் எம்.பி. இளவரசன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி, வங்கி மற்றும் நிதியியல் இணைப்பதிவாளர் சிவாஜி, ஆர்டிஓ கணபதி, திருமானூர் ஒன்றிய குழு தலைவர் சீனிவாசன், துணை தலைவர் குமரவேல்,

ஊராட்சி தலைவர் கஸ்தூரி, தனி அலுவலர்லெட்சுமணன், தாசில்தார் தண்டபாணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பெரம்பலூர் உழவர் சந்தையில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ7க்கு விற்பனை விவசாயிகள் கவலை –**

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்டத்தில் தக்காளி விலை கடும் வீழ்ச் சியை சந்தித்துள்ள நிலையில் கிலோ ரூ.7க்கு விற்பனையாவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பெரம்பலூரில் வடக்குமாதவி சாலையில் வேளாண்மைத்துறையின் விற்பனைப் பிரிவின் கீழ் உழவர்சந்தை செயல்பட்டு வருகிறது. இங்குள்ள 50 கடைகளில் உள்ளன. இவற்றில் மகளிர் சுயஉதவிக் குழுவினரும் இடம் பெற்றுள்ளனர். உழவர் சந்தைக்கு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், சேலம் மாவட்டம் தலைவாசல், திருச்சி மாவட்டத்தில் துறையூர், முசிறி பகுதிகளில் ஆகிய பகுதிகளில் இருந்து ஆப்பிள் தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள எசனை, தம்பிரான்பட்டி, குரும்பலூர், நொச்சியம், அன்னமங்கலம், ஈச்சங்காடு, அரசலூர், கோ னேரிப்பாளையம், பெரியவடகரை ஆகிய கிராமங்களில் இருந்து நாட்டுத்தக்காளி கொண்டு வரப்படுகிறது.

நெல், கரும்பு, மஞ்சள் சாகுபடிக்கு போதிய தண்ணீர் இல்லாத காரணத் தால் குறுகிய கால பணப்பயிரான தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருவதால் உழவர் சந்தைக்கும், வாரச்சந்தைக்கும், தினசரி மார்க்கெட்டிற்கும் தக்காளி வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. இதனால் தக்காளி விலை வீழ்ச்சி கண்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி பெரம்பலூர் உழவர்சந்தையில் ஆப்பிள் தக்காளி கிலோ ரூ.8க்கும், நாட்டுத்தக்காளி கிலோ ரூ.7க்கும் விற்கப்பட்டது.

இதுகுறித்து உழவர்சந்தையின் உதவி நிர்வாக அலுவலர்கள் அனந்தராமன், சின்னதுரை ஆகியோர் கூறுகையில், கடந்த நவம்பர், டிசம்பரில் தக்காளி கிலோ ரூ.16முதல் ரூ.20வரை விற்கப்பட்டது. இப்போது ரூ.7க்கும், ரூ.8க்கும் விற்கப்படுகிறது. குறைந்த நீர்ப்பாசனம், குறுகியகால சாகுபடி, அன்றாட விற்பனை, கைமேல் காசு, இடைத்தரகர் இல்லாதது போன்றவற்றால் தக்காளி மற்றும் காய்கறி சாகுபடி அதிகரித் துள்ளது. இதனால் தற்போது 89 கடைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொடர் வரத்து காரணமாக விரைவில் தக்காளி கிலோ ரூ.5க்கும் விற்கப்படுமென எதிர்பார்க்கிறோம் என்றனர். தக்காளி விலை வீழ்ச்சி குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், தக் காளி கிலோ ரூ.5க்கு விற் றால் அதில் சாகுபடி செல வை பெறமுடியாது. மேலும் தக்காளி விரைவில் அழுகும் தன்மை கொண்ட தால் ஒன்றிரண்டு நாட்களில் விற்காவிட்டால் அழுகி வீதியில் தான் கொட்ட வேண்டும். எனவே வெங்காயத்திற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதுபோல தக்காளிக்கும் குளிர் பதனக் கிடங்கு அமைக்க வேண் டும். மேலும் தக்காளியை பதப்படுத்தி தக்காளி தொக்கு தயாரிக்கும் சிறு தொழிற்சாலைகள் அமைக்க மாவட்ட நிர்வா கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். –

இன்றைய வேளாண் செய்திகள்

27.02.2013 A.M

## கூடலூர், பந்தலூர் பகுதியில் பூத்து குலுங்கும் காபி செடிகள்; மழை பெய்தால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு

பந்தலூர்,

கூடலூர், பந்தலூர் பகுதியில் தற்போது காபி செடிகள் பூத்து குலுங்குகிறது. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்து உள்ளனர்.

காபி செடிகள்

கூடலூர், பந்தலூர் தாலுகாவில் கடந்த சில வாரங்களாக கடும் கோடை வெயில் சுட்டெ ரித்து வருகிறது. இதனால் நீர்நிலைகள் வறண்டு விட்டன. வனப்பகுதிகள் வறட்சியால் கருகி காணப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் கூடலூர், பந்தலூர், மசினகுடி பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் சில தினங்கள் வெப்பம் தணிந்து மிதமான குளிர்கால நிலை நிலவியது. தற்போது வெயி லின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் கூடலூர், ஓவேலி, பந்தலூர், உப்பட்டி, குந்தலாடி, பிதிர்காடு, பாட்ட வயல், அம்பலமூலா உள்ளிட்ட பகுதிகளில் ரொபஸ்டா, அரபிக்கா என 2 வகையான காபி செடிகள் பூத்து குலுங்குகின்றன.

16 ஆயிரம் ஏக்கர்

கூடலூர் பகுதியில் 16 ஆயிரம் ஏக்கர் பரபப்பளவில் ரொபஸ்டா வகை காபி செடிகளும், அரபிக்கா வகை காபி செடிகள் 4 ஆயிரம் ஏக்கரிலும் விளைவிக்கப்படுகின்றன. தற்போது காபி செடிகளில் உள்ள பழங்கள் அறுவடை செய்யக்கூடிய கால கட்டமாக உள்ளது. இந்த சமயத்தில் பூக்களும் பூத்துள்ளதால் அறுவடை செய்யும் பணிகள் பாதிக்கப் பட்டுள் ளன. ஏனெனில் காபி காய்கள் பறிக்கும் போது பூக்கள் உதிரக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் கடும் அவதி அடைந்து உள்ளனர்.

மழை பெய்தால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு

இந்த நிலையில் பூத்து குலுங்கும் காபி செடிகளுக்கு மழையோ அல்லது தண்ணீரோ தெளிக்க வேண்டும். இல்லையெனில் பூத்துள்ள பூக்கள் உதிர்ந்து விடக்கூடிய வாய்ப்பு உள்ளது. மாறாக மழை பெய்தால் பூக்கள் காய்த்து பழங்களாக வாய்ப்பு உள்ளது. இதனால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக காபி விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது 1 கிலோ காபி காய்கள் ரூ.60 வரை விற்கப்படுவதால் நல்ல விலை கிடைத்து வருவதாக விவசாயிகள் நம்பிக்கையோடு தெரிவித்தனர். இனி வரும் காலநிலைகளுக்கு ஏற்ப காபி விவசாயம் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## முதலைமேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கலெக்டர் முனுசாமி வழங்கினார்

கொள்ளிடம்,

நாகை மாவட்ட கொள்ளிடம் அருகே உள்ள முதலைமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு தமிழக அரசின் வறட்சி நிவாரணம் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கி, முதலைமேடு கிராமத்தில் உள்ள 411 விவசாயிகளுக்கு ரூ.53 லட்சம் நிவாரணமும், அளக்குடி கிராமத்தில் உள்ள 323 விவசாயிகளுக்கு ரூ. 49 லட்சமும், புளியந்துறை கிராமத்தில் உள்ள 600 விவசாயிகளுக்கு ரூ. 74 லட்சமும் மொத்தம் ரூ.1.76 கோடி வழங்கினார். மயிலாடுதுறை உதவி கலெக்டர் ரத்தினசாமி வரவேற்றார். சக்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் ஜெயராமன், ஒன்றியக்குழு தலைவர் மீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தாசில்தார் அசோகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் மலர்விழி, கலியமூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பினர் விஜயகுமார், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் நலினா, தனி அலுவலர்கள் சுப்பிரமணியன், தனலட்சுமி, விஜயகுமார், மதிவாணன், கூட்டுறவு வங்கி செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றியக்குழு உறுப்பினர் பாண்டியன் நன்றி கூறினார்.

## அறந்தாங்கி பகுதியில் விவசாயிகளுக்கு பயிர் பாதிப்பு நிவாரணம்

அறந்தாங்கி

அறந்தாங்கி பகுதியில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு நிவா ரணம் வழங்கப்பட்டது.

**பயிர் பாதுகாப்பு நிவாரணம்**

அறந்தாங்கி அருகில் உள்ள நாகுடி பயணியர் விடுதி வளாகத்தில் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் பாதிப்பு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அறந்தாங்கி வட்டாச்சியர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அறந்தாங்கி ஒன்றி யக்குழுத் துணைத் தலைவர் பெரியசாமி, அறந்தாங்கி கூட்டுறவு சங்க துணைப் பதி வாளர் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**ரூ.14 கோடியே, 68 லட்சத்து, 20 ஆயிரம்**

நிகழ்ச்சியில் அறந்தாங்கி ராஜநாயகம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு, அறந்தாங்கி வட்டத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர் கருகியதால் பாதிக்கப்பட்ட 8957 விவசாயிகளின் 9788 ஏக்கருக்கு பயிருக்கு தமிழக அரசின் பயிர் பாதிப்பு நிவாரணமாக ரூ.14 கோடியே, 68 லட்சத்து, 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகை மேற்பனைக்காடு, ஆயிங்குடி, பெரியாளூர், சுப்பிர மணியபுரம், அரசர்குளம், விஜயபுரம், ஏகப்பெருமாளூர், கொடிவயல், அத்தாணி, நிலை யூர், காசாவயல் உள்ளிட்ட 11 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு நேரடி யாக வழங்கப்படுகிறது.

**கல்லணை கால்வாய் மூலம்...**

இந்த நிவாரணம் அறந்தாங்கி வட்டத்தில் கல்லணைக் கால்வாய் மூலம் பாசன வசதி பெறும் 56 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதே போல மணமேல்குடி, ஆவுடையார்கோவில் வட்டங்களைச் சேர்ந்த கல்லணைக் கால்வாய் மூலம் காவிரி நீர் பாசனம் நடைபெறும் பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கலந்து கொண்டவர்கள்**

நிகழ்ச்சியில் நாகுடி ஊராட்சி மன்றத் தலைவர் திருநாவுக்கரசு, ஒன்றியக் கவுன்சிலர்கள் ரெங்கராசு, கந்தசாமி, அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ராமசாமி, ஊராட்சி மன்றத் துணை தலைவர் சேட்முகமது, அ.தி. மு.க நிர்வாகிகள் நாரா யணன், முத்துராமன், நரசிம்மன், வரு வாய்த் துறையினர், கூட்டுறவுத் துறையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி குவிண்டால் ரூ.3,941–க்கு விற்பனை

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற ஏல விற்பனையில் பருத்தி குவிண்டால் ரூ.3,941க்கு விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:

**இருப்பு வைக்க கிடங்கு**

பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், இடைத்தரகர்க ளால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய லாபம் தனியாருக்கு செல்லாமல் தடுக்கவும் பெரம்பலூரில் அதிகம் பயிரிடப்படும் விவசாய விளைபொருட்க ளான பருத்தி, மஞ்சள், நிலக் கடலை, எள் போன்ற விளை பொருட்கள் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் பெரம் பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வந்து ஏல முறையில் விளைபொருட்களை வாங்க வும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உயர்ந்த விலை, சரியான எடை, உலர்களம் வசதி, பொருளீட்டு கடன் வசதி, விளைபொருட்களை இருப்பு வைக்க கிடங்கு வசதி ஆகியவற்றோடு, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலையும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வி ளபொருள் இருப்பு வைத்திட நாள் ஒன்றுக்கு, மூட்டைக்கு 10 பைசா வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

**அடையாள அட்டை**

ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் தனி நபருக்கு பொருளீட்டு கடன் ரூ.2 லட்சம் வரை வழங்கப்படுகிறது. இந்த கடனுக்கு முதல் 15 நாட் களுக்கு வட்டி வசூலிக்கப்படு வது இல்லை. 16வது நாள் முதல் 6 மாதம் வரை 5 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் ஆண்டொன் றுக்கு 1 டன் அல்லது ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள விளை பொருள் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு உழவர் நலத் திட்ட அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டை மூலம் விவசாயிக ளுக்கு ரூ.1 லட்சம் வரை இலவச இன்சுரன்ஸ் வசதி கிடைக்கும்.

**விவசாயிகளுக்கு அழைப்பு**

சமீபத்தில் நடந்த பருத்தி ஏல விற்பனையில் அதிகபட்ச மாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 941க்கு விற் பனையானது. 133 மூட்டைகள் (4,018 கிலோ) பருத்தி ரூ.1 லட்சத்து 57 ஆயிரத்து 330க்கு விற்பனை செய்யப் பட்டது. மேலும் மக்காச் சோளம் 100 கிலோ அதிகபட்ச மாக ரூ.1,210க்கு விற்பனை யானது. மக்காச்சோளம் மொத்தம் ரூ.27 ஆயிரத்து 511க்கு விற்பனை செய்யப் பட்டது.எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வெள்ளிக் கிழமை தோறும் நடைபெறும் ஏல விற்பனையில் தங்கள் பருத்தியை கொண்டு வந்து விற்பனை செய்து பயன் பெற வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை கலெக்டர் செந்தில்குமார் வழங்கினார்

திருமானூர்

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணை தொகையை கலெக்டர் செந்தில்குமார் வழங்கினார்.

**வறட்சி நிவாரண தொகை**

திருமானூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரண தொகை யினை விவசாயிகளுக்கு கலெக்டர் செந்தில்குமார் வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் ஏற்பட்ட பயிர் பாதிப்பு மற்றும் வறட்சி குறித்து காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணம் மற்றும் வறட்சி நிவாரணம் அரசாணைகளின் மூலம் அரியலூர் மாவட்டத் திற்கு வறட்சி நிவாரண தொகையாக ரூ.28 கோடியே 60 லட்சத்து 95 ஆயிரத்து 810 தமிழக அரசால் அறிவிக்கப் பட்டு ஆணை வெளியிடப் பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 41 கிராமங்களில் பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 836 பேருக்கு 19 ஆயிரத்து 54 ஏக்கர் நிலங்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.

**வங்கி கணக்கில்...**

கிராம தொடக்க கூட்டுறவு வேளாண் வங்கியில் கணக் குள்ளவர்களுக்கு இத் தொகை முழுமையாக வழங்கப்பட்டுள் ளது. வங்கியில் கணக்கு ஆரம் பித்து அதன் கணக்கு புத்தகத்தை அலுவலர் களிடம் வழங் கினால் நிவாரணத் தொகை அவர்களது கணக்கில் ஏற்றப் படும். தேசிய வங்கி மற்றும் தனியார் வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்க ளுக்கும் நிவாரணத்தொகை வழங்கப் படும்.இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் இளவரசன் எம்.பி., இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) உமாமகேஸ்வரி, இணைப்பதிவாளர் (வங்கி மற்றும் நிதியியல்) சிவாஜி, அரி யலூர் வருவாய் கோட்டாட்சியர் கண பதி, திருமானூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சீனிவாசன், துணைத்தலைவர் குமரவேல், ஊராட்சி தலைவர் கஸ்தூரி, தனி அலுவலர் லட்சுமணன், வட்டாட்சி யர் தண்டபாணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஏற்றுமதி அதிகரிப்பால் பஞ்சு விலை 11 சதவீதம் உயர்வு உள்ளூர் மில்களுக்கு பஞ்சு கிடைப்பதில் சிரமம்

விருதுநகர்,

ஏற்றுமதி அதிகரிப்பால் கடந்த 10 தினங்களில் பஞ்சு விலை அதிகரித்து உள்ள நிலையில், உள் ளூர் மில்களுக்கு பஞ்சு கிடைப்பதில் சிரமம் ஏற் பட்டுள்ளது.

### திடீர் உயர்வு

கடந்த 4 மாதங்களாக பஞ்சு விலைகளில் மாற்றம் ஏதும் இல்லாமல் நிலையாகவே இருந்து வந்தது. 355 கிலோ எடை கொண்ட ஒரு கண்டி சங்கர் 6 வகை பருத்தி ரூ.34 ஆயிரம் விலையில் இருந்து வந்தது. ஆனால் கடந்த 10 தினங்களில் இதன் விலை திடீரென 11 சதவீதம் உயர்ந்து ரூ.38 ஆயிரமாக விற்பனை செய்யப்படுகிறது. இதற்குக் காரணம் ஏற்றுமதி அதிக ரிப்புதான் என்று கூறப்படு கிறது.

### 50 லட்சம்

இது பற்றி பஞ்சு வணிக வட்டாரத்தினர் தெரிவித்த தாவது:–

நடப்பு ஆண்டின் பருத்தி சாகுபடி விற்பனை சந்தைக்கு வரத்தொடங்கி விட்டது. ஆனாலும் ஏற்றுமதிக்கு என 50 லட்சம் பஞ்சு பேல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத னால் உள்ளூர் மில்களுக்கு பஞ்சு கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடை யில் வெளிநாட்டு சந்தையில் ஏப்ரல் மாத டெலிவரிக்கே ஒரு கண்டி விலை ரூ.40 ஆயி ரத்துக்கு கொள்முதல் செய்ய வெளிநாட்டு வணிகர்கள் தயாராக உள்ளனர். இதனால் பஞ்சு ஏற்றுமதி மேலும் அதிக ரிக்கும் என கூறப்படுகிறது.

இந்திய அரசின் பஞ்சு வர்த் தக கழகம் ஆந்திராவில் மட் டும் பஞ்சு பேலை கொள் முதல் செய்து உள்ளது. மேலும் பஞ்சு வர்த்தக பெரு வணிகர்க ளும் மொத்தமாக பஞ்சு கொள்முதலை செய்து

வருவ தால் உள்ளூரில் உள்ள நூற்பு மில்களுக்கு பஞ்சு கிடைப்ப தில் பெரும் சிரமம் ஏற்பட்டுள் ளது. இந்நிலையில் நூல் விலை குறைந்து வருவது அதிர்ச்சி அளிக்கிறது.

உள்ளூர் மில்களுக்கு பஞ்சு கிடைப்பதில் சிரமம் ஏற்பட் டால் நூல்கள் கிடைப்பதிலும் சிரமம் ஏற்படும் என்று கூறப் படுகிறது. இதனால் ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள் தங்களுக்கு உள்ள ஏற்றுமதி யாளர்களை அனுப்புவதற்கு மிகுந்த சிரமப்படும் நிலை ஏற் படும். எனவே இதற்காகவாவது பஞ்சு விலை நிலையாக இருக்க வேண்டியது அவசியமாகும். எனவே உள்ளூர் மில்களுக்கு பஞ்சு கிடைக்கும் வகையில் இந்திய அரசின் பருத்தி கழகம் பஞ்சு கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண் டியது அவசியமாகும். இவ்வாறு அவர்கள் தெரி வித்தனர்.